2. அறிவிப்பு

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு 1974–ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடமை உரிமை வழங்கல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1974–ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்தம்—செல்திறன் அளித்தல்) சட்ட முன் வடிவு, ஆகியவை குறித்த கூட்டு ஆய்வுக் குழுக்களில் திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்களுக்குப் பதிலாக வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. செ. மாதவன் அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் அவர்களைக் கூடுதல் உறுப்பினராகவும், முறையே நியமித்துள்ளதாக மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வந்துள்ளது.

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, அரசியலமைப்புச் சட்டத்தின் 199-வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் துணைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம் மேலவையின் பரிந்துரைக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப் பட்டுள்ளன:—

(1) 1975–ஆம் ஆண்டு, இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1975).

(2) தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975).

(3) தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975).

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம் மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப் பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கடன் பெற்றோர் (தற்காலிக நிவாரண) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1975).

(2) தமிழ்நாடு, 1975–ஆம் ஆண்டு, கல்வி நிறுவனங்கள் (சொத்துக்களின் தற்காலிகக் கட்டுப்பாடு) திருத்த—செல்திறன் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/1975).

(3) 1975–ஆம் ஆண்டு உடமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975;